Australian Government
Department of Human Services

TAMIL

# Assurance of Support

சில விசா விண்ணப்பதாரர்களைப் பொருத்த வரையில், அவர்களுக்கு ஆஸ்திரேலியாவில் வசிப்பதற்கு விசா கொடுப்பதற்கு முன்பே, அவர்கள் Assurance of Support ஒன்றைப் பெற வேண்டியுள்ளது.

## ஒரு Assurance of Support என்பது என்ன?

ஒரு Assurance of Support (AoS ) என்பது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ஒருவருக்கும் (the assurer) எங்களுக்கும் இடையே செய்து கொள்கிறதோர் சட்டப்பூர்வ ஒப்பந்தமாகும்.

AoS கொடுப்பவர் அல்லது கொடுக்கும் நிறுவனம் விசா விண்ணப்பம் செய்துள்ளவருக்கு (the assuree), இவர் தான் AoS-இன் கீழ் இருப்பவர், நிதி ரீதியாக ஆதரவளிப்பதற்கு ஒப்புக்கொள்கிறார் அல்லது ஒப்புக் கொள்கிறது. இது, விசா விண்ணப்பம் செய்துள்ளவர் Centrelink பணப்பட்டுவாடாக்களைச் சார்ந்திருக்காமல் இருப்பதற்கேயாகும்.

ஒரு AoS ஒப்பந்தமானது, விசா வகையைப் பொறுத்து 1, 2, 4 அல்லது 10 ஆண்டுகளுக்கானதாக இருக்க முடியும்.

விசா விண்ணப்பம் செய்துள்ளவர் ஆஸ்திரேலியாவில் இருந்தால், புதிய விசாவை வழங்குகிற தேதியிலிருந்து AoS ஒப்பந்தம் தொடங்கும். விசா விண்ணப்பதாரர் ஆஸ்திரேலியாவில் இல்லை என்றால், அவர்கள் ஆஸ்திரேலியாவிற்கு வந்து சேரும் தேதியிலிருந்து AoS ஒப்பந்தம் துவங்கும்.

## யாருக்கு Assurance of Support அவசியமாகிறது

ஒருவர் விசா ஒன்றுக்கு விண்ணப்பித்த பிறகு, Department of Home Affairs அவருக்கு AoS ஒப்பந்தம் ஒன்று அவசியமா என்பதைத் தெரியப்படுத்தும்.

## எப்படி AoS ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொடுப்பது

இணைய வாயிலாக விண்ணப்பியுங்கள் அல்லது எங்களது இணையதளத்தில் உள்ள படிவத்தை உபயோகித்து விண்ணப்பியுங்கள். அது குறித்துப் பேச, தொலைபேசி நேர்காணலுக்காக நாங்கள் உங்களைத் தொலைபேசியில் அழைத்துப் பேசுவோம்:

- நீங்கள் AoS ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொடுக்க என்ன செய்ய வேண்டும்

- உங்களிடம் ஆதரவைக் கொடுப்பதற்கான நிதி ஆதாரம் இருக்கிறதா, அதோடு அதற்கான சட்ட மற்றும் மற்ற நிதி சார்ந்த கடப்பாடுகளை நிறைவேற்றித் தர முடியுமா.

நீங்கள் ஒரு AoS ஒப்பந்தத்தைச் செய்து கொடுத்து விட்ட பிறகு, உங்களால் அதை இரத்து செய்ய முடியாது.

## வங்கி உத்தரவாதம் என்றால் என்ன?

சில AoS ஒப்பந்தங்களுக்கு Commonwealth Bank of Australia வழங்குகிறதோர் வங்கி உத்தரவாதம் அவசியமாகிறது. இதன் பொருள், AoS ஒப்பந்தம் இருக்கும் காலத்திற்கு நீங்கள் அந்த வங்கியில் பணம் போட்டு வைக்க வேண்டும் என்பதேயாகும். அந்த வங்கி உத்திரவதத்தை, நாங்கள் AoS காலத்தின் போது விசா விண்ணப்பதாரர் சில வகையான பணப்பட்டுவாடாக்களைச் செய்கிறோம் என்றால் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு உபயோகித்துக் கொள்ளலாம்.

வங்கி உத்தரவாதத் தொகையின் அளவானது, பின்வருவனவற்றைப் பொருத்தேயிருக்கும்:

- நீங்கள் ஒரு தனிநபராக விண்ணப்பிக்கிறீர்களா அல்லது ஒரு நிறுவனமாக விண்ணப்பிக்கிறீர்களா
- நீங்கள் உத்திரவாதம் தரவிருக்கிற ஆட்களின் எண்ணிக்கை, மற்றும்
- அவர்கள் விண்ணப்பித்துள்ள விசாவின் வகை.

## எங்களிடமிருந்து பெற்ற பணத்தைத் திருப்பிச் செலுத்துதல்

ஒரு Aos ஒப்பந்தக் காலத்தின் போது, நாங்கள் புலம்பெயர்ந்தவர் ஒருவருக்கு நிதி ஆதரவைக் கொடுக்கலாம். இது AoS கொடுக்கிறவரோ அல்லது நிறுவனமோ ஆதரவை வழங்க முடியாமல் போகிறதால் இருக்கலாம். அல்லது ஆதரவை ஏற்றுக்கொள்வது புலம்பெயர்ந்தோருக்கு நியாயமற்றதாக இருக்கிறது என்பதால் இருக்கலாம். நிதி ஆதரவைத் தருவதற்கு முன்பாக, பொதுவாகவே நாங்கள் உங்கள் இருவரிடமும் பேசி விடுவோம்.

விசா விண்ணப்பதாரருக்குக் கொடுத்த ஒருசில பணப்பட்டுவாடாக்களை, AoS கொடுக்கிறவரோ அல்லது நிறுவனமோ எங்களுக்குத் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். அவர்கள், விசா விண்ணப்பதாரரின் குழந்தைகளுக்கு நாங்கள் கொடுக்கிற உதவித் தொகை எதையும் கூடத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கலாம்.

Assuree -க்குக் கொடுத்த திரும்பப் பெறக்கூடிய பணப்பட்டுவாடாக்களை assurer எங்களுக்குத் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். இவற்றில் அடங்குபவை:

- Austudy Payment
- Newstart Allowance
- Parenting Payment (Partnered)
- Parenting Payment (Single)
- Sickness Allowance
- Special Benefit
- Widow Allowance
- Youth Allowance.

கூடுதல் பணப்பட்டுவாடாக்களான Rent Assistance மற்றும் Crisis Payment ஆகியவையும் திரும்பப் பெறக்கூடியவையாக இருக்கலாம்.

## மேலும் தகவலுக்கு

- ஆங்கிலத்தில் மேலும் தகவல்கள் பெற humanservices.gov.au/assurance என்பதில் பார்க்க
- நீங்கள் humanservices.gov.au/yourlanguage என்பதில், உங்களால் உங்கள் மொழியில் வாசிக்க, கேட்க அல்லது பார்க்கவும் முடியும்.
- Centrelink பணப்பட்டுவாடாக்கள் மற்றும் சேவைகள் குறித்து உங்கள் மொழியிலேயே எங்களிடம் பேச **131 202** என்ற எண்ணில் தொலைபேசியில் அழைத்துப் பேசுங்கள்
- Medicare மற்றும் Child Support பணப்பட்டுவாடாக்கள் மற்றும் சேவைகள் குறித்து உங்கள் மொழியிலேயே எங்களிடம் பேச **131 450** என்ற எண்ணில் Translating and Interpreting Service (TIS National) அமைப்பைத் தொலைபேசியில் அழைத்துப் பேசுங்கள்
- சேவை மையம் ஒன்றுக்கு நேரில் சென்று வாருங்கள்.

**குறிப்பு** : ஆஸ்திரேலியாவில் எங்கிருந்தும், உங்கள் வீட்டு தொலைபேசியிலிருந்து '13' எண்களுக்குச் செய்யும் தொலைபேசி அழைப்புகளுக்கு ஒரே குறித்த விகிதத்தில் கட்டணம் விதிக்கிறார்கள். அக்கட்டண விகிதம், ஒரு உள்ளூர் அழைப்புக் கட்டணத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம், அதோடு அது தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடவும் செய்யலாம். உங்கள் வீட்டுத் தொலைபேசியில் இருந்து '1800' எண்களுக்குச் செய்யும் தொலைபேசி அழைப்புகள் இலவசமானவையாகும். பொதுத் தொலைபேசிகள் மற்றும் கைபேசிகளில் இருந்து செய்யும் அழைப்புகளுக்கு, இதைவிட அதிகமானதோர் கட்டணத்தை விதிக்கலாம்.

## பொறுப்பறிவிக்கை

இந்தப் பிரசுரத்தில் இருக்கிற தகவல்கள், பணப்பட்டுவாடாக்கள் மற்றும் சேவைகளுக்கானதோர் வழிகாட்டியாக இருக்கும் நோக்கத்திற்கானவை மட்டுமே. நீங்கள் பணப்பட்டுவாடா ஒன்றுக்காக விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா என்றும், உங்களது குறிப்பான சூழ்நிலைகள் சம்பந்தமாக விண்ணப்பம் ஒன்றைச் செய்கிறீர்களா என்றும் முடிவு செய்வது உங்களது பொறுப்பேயாகும்.